மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியபடி, மானாமதுரையில் நாம் ஒரு பயிற்சி மையம் ஆரம்பிக்கவிருக்கிறோம். பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வை அங்கே கொண்டுவருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, வருகின்ற காலங்களில் செய்யவிருக்கிறோம். ஆகவே, நிதிநிலைமைக்கேற்ப, இருக்கின்ற சூழ்நிலைக்கேற்ப, மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்துபேசி, அந்தத் தொகுதியைப் பொறுத்தவரையில், நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கெனவே மானாமதுரை தொகுதியில் தொழில்கள் நல்ல முறையில்தான் இயங்கி வருகின்றன என்பதே என்னுடைய கருத்தாகும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

45—

துணை மின் நிலையம்

***54807—திரு. அ. பண்ணாரி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதி, ஆசனூர் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பவானிசாகர் தொகுதி, ஆசனூர் பகுதியில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்க தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன. தொழில்நுட்ப சாத்தியக்கூறுகளின் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அடுத்த கட்ட நடவடிக்கை

2023 மார்ச் 27]

எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி அவர்கள்.*

திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். ஆசனூர் மலைப் பகுதியில் 60 குக்கிராமங்கள் உள்ளன. அங்கு அடிக்கடி மின் தட்டுப்பாடு ஏற்படுகிறது. ஆகவே, அப்பகுதியில் விரைவாக துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய பகுதி, மிகவும் முக்கியமான பகுதி. அது மலைப் பகுதியாக இருப்பதால், தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு, இன்னும் 15 தினங்களுக்குள் வழங்குவதாக அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். அதனடிப்படையில், வரும் ஆண்டில், முன்னுரிமை அடிப்படையில், அந்தப் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி அவர்கள்.*

திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் தொகுதியிலுள்ள கடம்பூர் மலைப் பகுதிக்கும் துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டும். ஆசனூர் மலைப் பகுதிக்கும், கடம்பூர் மலைப் பகுதிக்கும் சத்தியமங்கலத்திலுள்ள ராஜ் நகர் பகுதியிலிருந்தும், கே.என். மலைப் பகுதியிலிருந்தும் மின்சாரம் செல்லும் வழித்தடங்கள் உள்ளன. இந்த மின்சாரம் செல்லும் வழித்தடங்கள் வனப்*

பகுதியைச் சார்ந்தவை. மின் கம்பிகள்மீது மரங்கள் விழுவதால் அடிக்கடி மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதனால் மக்கள் அல்லல்படுகிறார்கள். இந்த மின்சார தட்டுப்பாட்டைப் போக்க, ஆசனூர் மலைப் பகுதிக்குச் செல்லும் வழித்தடங்களிலும், கடம்பூர் மலைப் பகுதிக்குச் செல்லும் வழித்தடங்களிலும் உள்ள மின்சாரக் கம்பிகளை அகற்றிவிட்டு, அதற்குப் பதிலாக பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றித் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதிகளில் மேலே செல்லக்கூடிய கம்பிகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றுவது என்பது மிக முக்கியமான பணிதான். ஆனாலும், நிதிநிலைமைக்கேற்ப, ஒவ்வொரு பணியாக துறை எடுத்துக்கொண்டிருக்கிறது. எனவே, வரக்கூடிய ஆண்டுகளில் அதுகுறித்து ஆய்வு செய்யப்பட்டு, தேவை ஏற்படின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலைப் பெற்று, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி அவர்கள்.*

திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூர் தொகுதிக்குட்பட்ட வதம்பச்சேரி ஊராட்சியிலுள்ள எம்.ஜி.ஆர். நகரிலும், அப்பநாயக்கன்பட்டி கிராமத்திலும் அங்கிருக்கின்ற தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சாலைகளின் வேண்டுகோளுக்கிணங்க, துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா? ஆம் எனில், எப்போது அந்தத் திட்டம் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.*

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 மார்ச் 27]

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 ஆண்டுகளில் 316 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் வழங்கி, சூலூர் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 5 இடங்களில் துணை மின்நிலையங்கள் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். தாங்கள் சொல்லியிருக்கக்கூடிய காமநாயக்கன்பாளையத்தில் அதற்கான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட உள்ளன. ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும் பணிகள் நிறைவு பெற்ற பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதி பெற்று, அந்தப் பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன் அவர்கள்.*

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு, தருமபுரி சட்டமன்றத் தொகுதி, வெள்ளக்கல் பகுதியில் குறைந்த மின்னழுத்தத்தைப் போக்கும் விதத்தில் 110 கிலோ வாட் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அந்தப் பணி இன்னும் துவங்கப்படாமல் உள்ளது. நிலமும் அரசுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அவருடைய தொகுதியில் வெள்ளக்கல் பகுதியில் மட்டுமல்ல; மேலும் 3 புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்காக மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. அதில் வெள்ளக்கல் பகுதிக்கு 21 கோடி ரூபாய் மதிப்பிற்கு திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, வாரியத்தின் ஒப்புதல் பெற இருக்கின்றது. ஒப்புதல் பெறப்பட்ட பிறகு, விரைவில் டெண்டர் கோரப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அனகாபுத்தூர், பம்மல், பொழிச்சலூர் பகுதிகளில் 33 KV துணை மின் நிலையம் ரூ.48 கோடியில் மக்கள் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று அஸ்தினாபுரம், கீழ்க்கட்டளை பகுதிகளில் துணை மின் நிலையத்திற்கு இடம் கையகப்படுத்தப்பட்டு, இன்று டெண்டர் கோரப்படுகின்ற நிலை உள்ளது. ஆகவே, அந்தப் பணிகள் எப்போது தொடங்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி, நிலம் கண்டறியப்பட்டு, நிலம் வகைமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றது. இப்போது அதற்கான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட வேண்டும். துறையின் சார்பாக மதிப்பீடுகள் தயார் செய்கின்ற பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரைவில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, டெண்டர் பணிக்கான process எல்லாம் முடிந்த பிறகு, பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர் தொகுதியில் ஒரு துணை மின் நிலையம் மட்டுமல்ல, 3 துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.

2023 மார்ச் 27]

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். சென்ற கூட்டத் தொடரிலேயே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, கிருஷ்ணகிரி ஒன்றியத்தில் சோக்காடி கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். இதுவரை அந்தப் பணி துவங்கப்படவில்லை. இடம் தேர்வு செய்யப்பட்டதா என்பதையும், அந்தப் பணி எப்போது துவங்கப்படும் என்பதையும் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் பெண்ணேஸ்வரமடம் என்ற இடத்தில் ஏற்கெனவே அதற்கான அனுமதிகள் கொடுக்கப்பட்டு, அதற்கு 4 கோடியே 89 இலட்சம் ரூபாயில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது இன்னொரு பகுதியைச் சுட்டிக்காட்டி, அந்த இடத்திற்கு துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். இந்த ஆண்டில் எந்தெந்த இடங்களில் துணை மின் நிலையங்கள் தேவை என்று சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அந்தப் பகுதியைச் சேர்ந்த உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றிருக்கின்ற 52 இடங்கள் குறித்து துறைக்கு அனுப்பப்பட்டு, துறையின் சார்பாக சாத்தியக்கூறுகளை ஆராயக்கூடிய பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த report *வரப்பெற்ற பிறகு, அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன் அவர்கள்.*

திரு. நிவேதா எம். முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பூம்புகார் தொகுதியில் மேமாத்தூரிலிருந்து, பொறையார் வரை 20 கிலோ மீட்டர் தொலைவு இருப்பதாலும், அதிக மக்கள்தொகை கொண்ட பகுதியாக இருப்பதாலும்,*

10 கிலோ மீட்டர் இடைவெளியில் உள்ள சங்கரன்பந்தலில் துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் மின் உற்பத்தி அதிகரிக்கின்றபோது, மின் விநியோகத்திற்கான கட்டமைப்பை உருவாக்க வேண்டும்; அதை உடனே அமைத்திட வேண்டுமென்பது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவு. ஏற்கெனவே 316 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்ட நிலையில், கூடுதலாக 36 துணை மின் நிலையங்களை அமைப்பதற்கான தேவை இருப்பதாக துறைவாரியாக ஆய்வுகள் செய்யப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய பணிகளெல்லாம் துறைக்கு அனுப்பப்பட்டு தேவை ஏற்படின், முன்னுரிமை அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன் அவர்கள்.*

திரு. சி. மகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலை மாரியம்மன் கோயில் மிக முக்கியமான பிரசித்திபெற்ற தலம். இலட்சக்கணக்கான மக்கள் கூடி, அங்கே தேரோடும் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே உடுமலைப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் இதே கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். எனவே, அந்தத் தேரோடும் வீதிகளில், புதைவட கம்பிகள் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

2023 மார்ச் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயில்களில் குறிப்பாக தேரோடும் வீதிகளில், தேர் சுற்றி வருகின்றபோது முறையாக மின்சாரம் வழங்குவதற்காக 4 திருக்கோயில்களில் அதற்கான பணிகளைத் தொடங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, tender முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதல்களின்படி பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில், மீதமிருக்கக்கூடிய திருக்கோயில்களில், எந்தெந்தத் திருக்கோயில்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்பதை துறை தற்போது ஆராய்ந்து வருகிறது. துறையினுடைய அறிக்கையின் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, வரும் ஆண்டுகளில் எந்தெந்தக் கோயில்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது பின்னர் முடிவு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கோரிக்கையும் அதில் இணைத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், பந்தநல்லூரில் துணை மின் நிலையம் அமைக்க ஏற்கெனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, இடம் கையகப்படுத்தப்படுவதில் சற்று காலதாமதம் ஏற்படுகிறது. இடம் கிடைப்பதற்கான சூழ்நிலையும் இல்லை. ஆனால், அருகிலுள்ள இருமூலை என்ற ஊராட்சியில் அதற்கான இடம் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே ஒப்புதல் தந்திருக்கிற அந்த துணை மின் நிலையத்தை இருமூலை ஊராட்சிக்கு மாற்றித் தந்து, அங்கே துணை மின் நிலையம் அமைக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள் சுட்டிக்காட்டிய இடம் குறித்த விவரங்களை துறைக்கு அனுப்பி, துறையினுடைய அதிகாரிகள் மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களைச் சந்தித்து, அதற்கான வழிமுறைகளை உருவாக்குவதற்கு அறிவுறுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முருகேசன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

46—

ஆரம்ப சுகாதார நிலையம்

***50875—திரு. செ. முருகேசன்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, பரமக்குடி ஒன்றியம், தெளிச்சாத்தநல்லூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஒன்றிய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. தெளிச்சாத்தநல்லூர் கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் பரமக்குடி அரசு மருத்துவமனை செயல்பட்டு வருவதால்,